சுருக்கம்

மோட்டார் வாகனம் – ஈரோடு மாவட்டம் குருவரெட்டியூர் அரசு ஆரம்ப சுகாதார நிலைய வாகன எண் டி.என் 36ஜி–0109, கடந்த 25.10.2005 அன்று விபத்துக்குள்ளானதில் காயமடைந்தவர் மற்றும் மரணமடைந்தவரின் வாரிசுகள் ஈரோடு மாவட்டம், பவானி, மோட்டார் வாகன விபத்துரிமை கோரிக்கை தீர்ப்பாயத்தில் தொடர்ந்த வழக்கில் இழப்பீட்டுத் தொகை வழங்குதல் – நிதி ஒப்பளிப்பு ஆணை வெளியிடப்படுகிறது.

---

மக்கள் நல்வாழ்வ (மற்றும்) குடும்ப நலத்(எடி1) துறை

அரசாணை (2ப) எண்: 13

நாள் 10.2.2014
விஜய தை – 28
திருவள்ளுவர் ஆண்டு 2045

படிக்கப்பட்டது

இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை,
கடித எண் : 103016/ஆசுநி4/ அ3/2008, நாள் 13.3.2010.

ஆணை:–

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் அவர்கள் ஈரோடு மாவட்டம், குருவரெட்டியூர் அரசு ஆரம்ப சுகாதார நிலைய வாகன எண் டி.என் 36ஜி–0109, கடந்த 25.10.2005 அன்று வெள்ள நிவாரண பணிக்காக மருத்துவ அலுவலர் உள்ளிட்ட சுகாதாரப் பணியாளர்கள் ஆகியோர் சென்ற போது அம்மாபேட்டை சித்துார் அருகில் உள்ள கற்பகம் பெட்ரோல் பங்க் அருகில் பகல் 12.00 மணியளவில் பஜாஜ் சி.டி.100 மற்றும் டி.வி.எஸ். எக்ஸ்.எல் சூப்பர் ஆகிய இருசக்கர வாகனங்களோடு மோதி விபத்துக்குள்ளானது. இவ்விபத்தில் பஜாஜ் சி.டி.100 மோட்டார் சைக்கிள் ஓட்டி வந்த திரு.பெருமாள் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிர் இழந்துள்ளார். மேற்காணும் வாகனத்தின் பின்னால் அமர்ந்து வந்த திரு.இராசுப்பையன் அவர்களும் டி.வி.எஸ்.50 எக்ஸ்.எல் மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த திரு.சி.முருகேசன் என்பவரும் காயமடைந்துள்ளனர். ஆகவே, இவ்விபத்தில் உயிரிழந்த திரு.பெருமாள் என்பவரின் வாரிசுதாரர்கள் மற்றும் இவ்விபத்தில் காயமடைந்த திருவாளர்கள் இராசுப்பையன் (ம) சி.முருகேசன் ஆகியோர் தனித்தனியே ஈரோடு மாவட்டம், பவானி, மோட்டார் வாகன விபத்துரிமை கோரிக்கை தீர்ப்பாயத்தில், இழப்பீடு கோரி வழக்கு தொடுத்தனர். மேற்காணும் நபர்களால் தொடுக்கப்பட்ட வழக்கில், தீர்ப்பாயம், இழப்பீடு வழங்க கோரி ஆணை பிறப்பித்துள்ளது. விண்ணப்பதாரர் மனு தாக்கல் செய்த நாள் முதல், தொகை தீர்ப்பாயத்தில் வைப்பீடு செய்யும் நாள் வரையில் ஆண்டொன்றுக்கு 7.5 சதவீத வட்டியும் வழங்க ஆணையிட்டுள்ளது. மேலும் அத்தொகைக்கு நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்ப மருந்துத்துறை இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

(2/–)

2. மேற்காணும் சூழ்நிலையில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறை, இயக்குநர், அவர்கள் ஈரோடு மாவட்டம், குருவரெட்டியூர் அரசு ஆரம்ப சுகாதார நிலைய வாகன எண் டி.என் 36ஜி 0109 விபத்துக்குள்ளானதில் உயிரிழந்த திரு.பெருமாள் என்பவரின் வாரிசுதாரர்கள் மற்றும் இவ்விபத்தில் காயமடைந்த திருவாளர்கள் இராசுப்பையன் (ம) சி.முருகேசன் ஆகியோர் தனித்தனியே ஈரோடு மாவட்டம், பவானி, மோட்டார் வாகன விபத்துரிமை கோரிக்கை தீர்ப்பாயத்தில், இழப்பீடு கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் தீர்ப்பாயத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் 31.10.2013 வரை கணக்கிடப்பட்ட இழப்பீட்டுத் தொகை (ம) வட்டி பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| 1. | சி.எம்.ஏ. 61/2010. (எம்.சி.ஓ.பி. 343/2005) | 7,98,627.00 |
| 2. | சி.எம்.ஏ 406/2011 (எம்.சி.ஓ.பி. 135/2006 | 3,21,733.00 |

3. நீதிமன்ற ஆணையினை செயற்படுத்தும்பொருட்டு, மேற்காணும் இரண்டு வழக்குகளுக்கும் சேர்த்து ரூ.11,20,360.00 (ரூபாய் பதினொரு இலட்சத்து இருபதாயிரத்து முந்நூற்று அறுபது மட்டும்) கீழ்க்கண்டவாறு கணக்கிட்டு வழங்கலாம் என பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்புத்துறை இயக்குநருக்கு அரசு ஒப்புதல் அளித்து ஆணையிடுகிறது.

<u>வழக்கு எண் சி.எம்.ஏ. எண் 61/2010 எம்.சி.ஓ.பி 343/2005.</u>

| | |
|---|---|
| நீதிமன்ற தீர்வுத் தொகை (ரூ 5,12,024 – ரூ 25,000/–) | ரூ 4,87,025.00 |
| (+) 7.11.2005 முதல் 9.2.2009 வரை 7.5 சதவீத வட்டி | ரூ 1,25,305.00 |
| (+) 10.2.2009 முதல் 31.10.2013 வரை | ரூ 1,72,627.00 |
| மனுவின் விகிதாச்சார செலவு | ரூ 13,670.00 |
| மொத்தம் | ரூ 7,98,627.00 |

<u>வழக்கு எண் சி.எம்.ஏ. எண் 406/2011 எம்.சி.ஓ.பி 135/2006.</u>

| | |
|---|---|
| நீதிமன்ற தீர்வுத் தொகை (ரூ2,37,000 – ரூ 25,000/–) | ரூ 2,12,000.00 |
| (+)14.6.2006 முதல் 21.7.2010 வரை 6 சதவீத வட்டி | ரூ 58,399.00 |
| (+) 22.7.2010 முதல் 31.10.2013 வரை 6 சதவீத வட்டி | ரூ 41,749.00 |
| நீதிமன்ற செலவு | ரூ 9,585.00 |
| மொத்தம் | ரூ 3,21,733.00 |

| வ.எண் | | தொகை ரூ |
|---|---|---|
| 1. | சி.எம்.ஏ. 61/2010. (எம்.சி.ஓ.பி. 343/2005) | 7,98,627.00 |
| 2. | சி.எம்.ஏ 406/2011 (எம்.சி.ஓ.பி. 135/2006) | 3,21,733.00 |
| | மொத்தம் | 11,20,360.00 |

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்கண்ட கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

"2210–மருத்துவமும் பொது சுகாதாரமும் – 03 ஊரக சுகாதாரப்பணிகள் – ஆங்கிலமுறை மருத்துவம் – 103 ஆரம்ப சுகாதார நிலையங்கள் – I திட்டத்தில் சேராதது – BI தொடக்க சுகாதார நிலையங்கள் – 51 இழப்பீடு – 02. ஏனைய இழப்பீடுகள்" (சாட்டியது)
( த.தொ.கு.2210–03–103–BI –5125)

5. மேலே பத்தி 3ல் ஒப்பளிப்பட்டுள்ள செலவினத்திற்கான கூடுதல் நிதி 2013–2014ம் ஆண்டு இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் வழங்கப்படும் அவ்வாறு வழங்குவதை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும் 2013–2014ம் ஆண்டிற்கான இறுதி திருத்த மதிப்பீட்டு நிதியொதுக்கத்திற்கான கருத்துருவை நிதி (சுகாதாரம்–I) த்துறைக்கு அனுப்பும் பொழுது இத்தொகையும் தவறாமல் சேர்த்து அனுப்புமாறு பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண் 3283/ சுகாதாரம்–I/14, நாள் 31/1/2014ல் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப்பேரேடு எண் 2764 (இரண்டாயிரத்து எழுநூற்று அறுபத்து நான்கு) பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

( ஆளுநரின் ஆணைப்படி )

ஜெ. ராதாகிருஷ்ணன்
அரசு செயலாளர்

பெறுநர்,
பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை, சென்னை 6
மாநில கணக்காயர், சென்னை–18.
மாநில கணக்காயர் (தனி–II), சென்னை.18.
மாவட்ட கருவூல அலுவலர், விருதுநகர் மாவட்டம்.
நகல்:
உள் (போ–வ. IV துறை நிதி (வ.செ.பொது–2/சுகாதாரம்– I)த்துறை, சென்னை–9.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(டேட்டா செல்) துறை, சென்னை–9.
இ.கோ / சுத்த நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

10/04/14

பிரிவு அலுவலர்